செ.வெ.எண்: 548 நாள்: 27.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**உலக சுற்றுலா தின விழாவையொட்டி மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்ட மராத்தான் ஓட்டம் மற்றும் சைக்கிள் பேரணியினை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.வே.சரவணன் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

---

உலக சுற்றுலா தின விழாவையொட்டி புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்க வளாகத்திலிருந்து மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்ட மராத்தான் ஓட்டத்தினை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.வே.சரவணன் அவர்கள் இன்று (27.09.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த மராத்தான் ஓட்டத்தில் விளையாட்டு விடுதி மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

விளையாட்டரங்கத்தில் இருந்து மராத்தான் ஓட்டம் தொடங்கி மாவட்ட ஆட்சியரக சாலை சந்திப்பு, நகராட்சி அலுவலகம், அண்ணாசிலை, எம்.ஜி.ஆர். சிலை, பேருந்துநிலையம் வழியாக விளையாட்டரங்கத்தை வந்தடைந்தனர்.

தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.வே.சரவணன் அவர்கள் விளையாட்டரங்கத்தில் இருந்து, சைக்கிள் போட்டி வீரர்கள், மா.மன்னர் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மாணவர்கள் பங்கேற்ற சைக்கிள் பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த சைக்கிள் பேரணியானது விளையாட்டரங்கத்தில் இருந்து மாலையீடு, டி.வி.எஸ் கார்னர், பழைய பேருந்துநிலையம், கீழராஜவீதி, வடக்கு ராஜவீதி, பால்பண்ணை வழியாக விளையாட்டரங்கத்தை வந்தடைந்தது.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சா.சத்தியமூர்த்தி, மாவட்ட விளையாட்டு அலுவலர் குமரன், மாவட்ட சுற்றுலா அலுவலர் நெல்சன், வட்டாட்சியர் செந்தில்குமார், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன், பயிற்சியாளர் செந்தில்கணேசன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**